தலைஞாயிறு, வேதாரண்யம் ஒன்றிய கடலோரப் பகுதிகளில் மீனவர் வழிகாட்டி விளக்குகள்.

613—(*வினா எண் 11903) திரு. மா. மீனாட்சிசுந்தரம்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தலைஞாயிறு, வேதாரண்யம் ஒன்றியத்தின் கடலோரப் பகுதிகளில் மீனவர் வழிகாட்டி விளக்குகள் அமைக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ) தலைஞாயிறு பஞ்சாயத்து ஒன்றியப் பகுதியில் வானவன்மாதேவி என்னுமிடத்தில் வழிகாட்டி விளக்கு இயங்கி வருகிறது. வேதாரண்யப் பஞ்சாயத்து ஒன்றியப் பகுதியில் ஆற்காட்டுத் துறை கிராமத்தில் வழிகாட்டி விளக்கு அமைக்கப்பட்டு வருகிறது.

திரு. மா. மீனாட்சிசுந்தரம் : தலைவர் அவர்களே, இப்போது இரண்டு இடங்களில் வழிகாட்டி விளக்குகள் இருப்பதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். ஆனால் அவை சரியாக இயங்கவில்லை. அதோடு, வெள்ளப்பள்ளம், வானவன்மாதேவி, கோடியக்கரை ஆகிய பகுதிகளில், வானவன் மாதேவியில் அந்த விளக்கு இருக்கிறது. வெள்ளப்பள்ளத்திலேயும் கோடியக்கரையிலேயும் அது இல்லை. எனவே, உடனடியாக எரியாத விளக்குகளை எரிய வைக்கவும், எரிகிற மாதிரி இரண்டு விளக்குகளை அந்தப் பகுதிகளுக்கு அமைக்க உத்தேசம் இருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : பேரவைத் தலைவர் அவர்களே, எங்கு விளக்கு எரியவில்லையோ அதுபற்றி புகார் எழுதிக் கொடுத்தால் அது நிச்சியமாக கவனிக்கப்படும். மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன் அதுபோன்ற விளக்குகள் தஞ்சை மாவட்டத்தில் 17 இடங்களில் எங்கெங்கு அமைப்பது என்று முடிவு எடுக்கப்பட்டு, 7 இடங்களில் இப்போது கட்டி முடிக்கப்பட்டு விட்டன. மீதி 10 இடங்களில் வேலை நடந்து வருகிறது. அதிலே மாண்புமிகு உறுப்பினர் சொல்கின்ற ஊர் இல்லை.

திண்டுக்கல்லில் கள்ளர் சீரமைப்பு விடுதிகளுக்குச் சொந்தக் கட்டடங்கள்.

614—(*வினா எண் 12304) : திரு. ஆ. பிரேம்குமார் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

திண்டுக்கல் நகரில் உள்ள கள்ளர் சீரமைப்பு இரு விடுதிகளுக்கு (1 ஆண், 1 பெண்) சொந்த கட்டிடம் கட்ட அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

1987 மே 6]

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இல்லை.

திரு. ஆ. பிரேம்குமார் : பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கனவே இந்த கள்ளர் சீரமைப்பு விடுதிகள் வாடகைக் கட்டிடத்தில்தான் இயங்கி வருகின்றன. அங்கு சௌகரியம் இல்லாத நிலையில் மாணவர்கள் கஷ்டப்படும் சூழ்நிலை இருக்கின்றது. ஆகவே, இவற்றைக் கருத்தில் கொண்டு இந்த வருடமாவது தனிப்பட்ட முறையிலே கட்டிடம் கட்டிக்கொடுக்க அரசு ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஆண்டு விடுதிகள் கட்டுவதற்கு அரசு அனுமதி அளித்திருக்கிறது. அப்போது அதைப்பற்றி பரிசீலிக்கலாம்.

திரு. ஆ. பிரேம்குமார் : பேரவைத் தலைவர் அவர்களே, அதுபோல், இலங்கைப் பகுதியிலிருந்து துளுவ நாட்டிலிருந்து துளுவ வெள்ளாளர் என்ற ஒரு வகுப்பினர் இங்கே தமிழகத்தில் வந்திருக்கிறார்கள். அவர்கள் பிற்படுத்தப்பட்டோர் பட்டியலில் இருக்கிறார்கள். அவர்களுக்கு முக்கியத்துவம் கொடுக்கின்ற பொருட்டு, அவர்களை, 'மோஸ்ட் பேக்வேர்டு கிளாஸ்' லிஸ்டிலே சேர்ப்பதற்கு அரசு ஆவன செய்யுமா ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : பேரவைத் தலைவர் அவர்களே, துளுவ வெள்ளாளர்கள் இலங்கைப் பகுதியிலிருந்து வந்தவர்கள் என்று சொல்வதை மாற்றிக் கொள்ளவேண்டும். தமிழகத்திலே இருக்கிறவர்கள் இருக்கிறார்கள். மிக பிற்படுத்தப் பட்டோர் பட்டியலில் அவர்களைச் சேர்ப்பது இப்போது இயலாத காரியம். (இப்போது அதற்குச் சட்டம் இல்லை).

அருப்புக்கோட்டை தொகுதி, கல்லூரணியிலுள்ள பிற்பட்டோர் நலத்துறை மாணவர் விடுதி.

615—(*வினா எண் 12330) **திரு. வி. எஸ். பஞ்சவர்ணம் :** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அருப்புக்கோட்டை தொகுதி, கல்லூரணியில் உள்ள பிற்பட்டோர் நலத்துறை மாணவர் விடுதியினை நார்த்தம் பட்டிக்கு மாற்றி அமைக்கும் செயற்குறிப்பு உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது மாற்றப்படும் ?